# நகர் ஊரமைப்புத் துறை

**நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொறுப்பு), கோயம்புத்தூர் மண்டலம் அவர்களின் நடவடிக்கைகள்**

முன்னிலை : திரு அ.விஜயன் பி.இ.,

ந.க.எண்.3061 /2017 கோம 3

திருவள்ளுவர் ஆண்டு 2048,
ஹேவிளம்பி வருடம்,கார்த்திகை ,
நாள் :21 .11.2017

பொருள் : மனைப்பிரிவு - நகர் ஊரமைப்புத் துறை – கோயம்புத்தூர் மண்டலம் - கோயம்புத்தூர் மாவட்டம் - பொள்ளாச்சி வட்டம்- கிட்டசூராம்பாளையம் ஊராட்சி மற்றும் கிராமம்- க. ச. எண்கள். 76/3பி2, 76/4, 79/1பி, 79/3பி1, 82/1 மற்றும் 83/2ல் 9.81 ஏக்கர் பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான – தொழில் நுட்ப ஒப்புதல் வழங்குவது – தொடர்பாக.

பார்வை :
1.வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), பொள்ளாச்சி வடக்கு அவர்கள் கடிதம் ந.க.எண். 970/2017/B2 நாள்.04.08.2016. (இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள்.23.08.2016)
2.மனுதாரர் செல்வி.யோகபிருந்தா என்பவரது விண்ணப்பம் நாள்.இல்லை. (இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள்.23.08.216).
3. அரசாணை எண்.71, ஊரக வளர்ச்சி துறை, நாள் 16.6.2003.
4. வேளாண் இணை இயக்குநர், கோயம்புத்தூர் அவர்கள் கடிதம் எண்.இ1/9492/2017 நாள்.18.09.2017.
5. இவ்வலுவலக கேட்பு கடிதம்.இதே எண் நாள்.16.11.2017
6. மனுதாரர்கடிதம் நாள்.17.11.2017.
7. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது சுற்றறிக்கை கடிதம் ந.க.எண.13686/2017/எல்ஏ1, நாள்.08.09.2017.
8. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் கடிதம் ந.க.எண்.12201/2017/சிபி, நாள்.28.09.2017.

-----------

பார்வை 1-ல் சுட்டிய கடிதத்துடன் பெறப்பட்ட மனைப்பிரிவு ஒப்புதலுக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், கிட்டசூராம்பாளையம் ஊராட்சி மற்றும் கிராமம், க. ச. எண்கள். 76/3பி2, 76/4, 79/1பி, 79/3பி1, 82/1, மற்றும் 83/2-ல் 9.81 ஏக்கர் பரப்பில் அமையும் உத்தேசிக்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் பேரில் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

அரசாணை எண்.71, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 16.6.2003-ன்படி நில உரிமை குறித்து உள்ளாட்சி நிர்வாகமே பொறுப்பானதாகும் மற்றும் நிர்வாக அதிகாரியால் (EXECUTIVE AUTHORITY) நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றின்பேரில் இத்தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது.

Scanned by CamScanner

ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ/(கோம)எண்.106/2017** என எண்ணிடப்பட்டு மூன்று நகல்கள் மேல் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

மேலும், பார்வை 3-ல் சுட்டியுள்ள அரசாணையில் தெரிவித்துள்ளபடி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மனைப்பிரிவு நிபந்தனை எண்.16-ன் பூங்காவிற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட பொது ஒதுக்கீடுகளையும் மற்றும் சாலைகளுக்கென ஒதுக்கப்பட்ட இடத்தையும் மனுதாரரால் தானப் பத்திரம் மூலம் **வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), பொள்ளாச்சி வடக்கு ஊராட்சி ஒன்றியம்** அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மனைப்பிரிவு நிபந்தனை எண் 19(இ) 19(உ) குறித்து உறுதி செய்த பின்னரே இறுதி ஒப்புதல் அளிக்க வேண்டும்.

மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.19(ஈ)-ன்படி உள்ளாட்சி மன்றத் தீர்மானம் மற்றும் அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

<u>சிறப்பு நிபந்தனைகள்:</u>

1. பார்வை 7ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது சுற்றறிக்கையின்படி"உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய்துறை சர்வே எண் உட்பிரிவுகள் செய்து அதற்கான விவரங்கள் உள்ளாட்சியால் பெறப்பட்ட பின்னரே மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் "

2. பார்வை 8ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் சுற்றறிக்கையின்படி "The Tamil Nadu Government in G.O.Ms.No.112,Housing and Urban Development Department dated:22.06.2017 have approved the TamilNadu Real Estate (Regulation & Development) Act 2016.The promotor has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be,in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority "

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ)
கோயம்புத்தூர் மண்டலம்

<u>இணைப்பு</u>
அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம்
<u>ம.வ/(கோம)எண்</u>: <u>106/2017</u> மற்றும்
மனைப்பிரிவு நிபந்தனைகள் } 3 நகல்கள்

<u>பெறுநர்</u>
வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),
பொள்ளாச்சி வடக்கு ஊராட்சி ஒன்றியம்,
பொள்ளாச்சி வட்டம்.
கோயம்புத்தூர் மாவட்டம்.

<u>கடித நகல்</u>
நகர் ஊரமைப்பு ஆணையர், (வரைபடம் மற்றும் நிபந்தனையுடன்)
சென்னை – அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>நகல் - மனுதாரர்</u>
செல்வி.R.யோகபிருந்தா,
க.எண.17,நேருகாலணி,
மகாலிங்கபுரம்,
பொள்ளாச்சி .

Scanned by CamScanner